## கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2013, திசெம்பர் 2 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 3 ஆந் திகதிய 1843/45 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் தாபிக்கப்பட்டதும், (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்துக்கு இக்கட்டளைச் சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.

3. நிறுவகமானது (இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

4. கலைப்பீடத்தினால் தற்போது நடாத்தப்படும் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுட்பட, மானிடவியல் மற்றும் விஞ்ஞானத்துறையிலான ஒவ்வொரு பட்டப்பின்படிப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டமும் இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்குவரும் திகதியன்று நிறுவகத்தினால் நடாத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

5. இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று நிறுவகத்தின் உயர்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆளுகின்ற விதிகளும் ஒழுங்குவிதிகளும், பல்கலைக்கழகத்தின் மூதவையினதும் பேரவையினதும் ஒருப்பாட்டுடன் நிறுவகத்தினால் வேறுவகையாகக் கூறப்பட்டாலொழிய, மாற்றப்பட்டாலொழிய அல்லது திருத்தப்பட்டலொழிய, கலைப்பீடத்தின் உயர் பட்டங்களை ஆளுகின்ற அதே விதிகளும் ஒழுங்குவிதிகளும் ஆகவிருத்தல் வேண்டும்.

6. இச்சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கும், (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் அமைவாக, நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மாணவர்களைச் சேர்த்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் என்ற துறைகளில் பட்டப்பின்படிப்புப் போதனைகளையும், பயிற்சியையும், ஆராய்ச்சியையும் வழங்குதல் ;

(இ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தின் பல்வேறு கிளைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்கள் என்பவற்றைத் தீர்மானித்தல் ;

(ஈ) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான கற்கை நிகழ்ச்சித்திட்டங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகத் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கங்களுக்காகப் பட்டப்பின்படிப்புப் பரீட்சைகளைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் நடாத்துதல் மற்றும் அத்தகைய பரீட்சையில் தேறியிருக்கின்றவர்களும் அத்துடன் பல்கலைக்கழக துணைவிதி மூலம் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியிருக்கின்றவர்களுமான ஆட்களை பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைகள் அளிக்கப்படுவதற்குத் தகவுடையோராகவுள்ளார்களென நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களை ஒத்த அல்லது பொருளளவில் ஒத்த, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன், ஆசிரியர்களை, மாணவர்களை மற்றும் கல்விமான்களைப் பரிமாற்றுதல் என்ற வகையாக அல்லது வேறு வகையாக ஒத்துழைத்தல் ;

(ஊ) நிறுவகத்தில் சேருவதற்கு நாடுகின்ற மாணவர்களினால், அல்லது நிறுவகத்தின் மாணவர்களினால், பல்கலைக்கழகங்களிலும் ஒத்த அந்தஸ்தைக் கொண்ட இடங்களிலும் தேறப்பட்ட பரீட்சைகளையும், பின்பற்றப்பட்ட படிப்பு அல்லது கற்கைக் காலப்பகுதியையும், துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, நிறுவகத்திலான அத்தகைய பரீட்சைகளுக்கும் படிப்பு அல்லது கற்கைக் காலப்பகுதிகளுக்கும் அல்லது அவற்றின் அத்தகைய பாகத்துக்குச் சமமாகவுள்ளதென ஏற்றங்கீகரித்தல் மற்றும் அத்தகைய ஏற்றங்கீகாரத்தை எந்நேரத்திலும் மீளப்பெறுதல் ;

(எ) போதனைசார், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக நூலகங்களையும், கணினி நிலையங்களையும், வேறு கட்டிடங்களையும் நிறுவகத்தின் நோக்கத்துக்காகக் கட்டியமைத்தல், அவற்றுக்குச் சாதனமிடுதல் மற்றும் அவற்றைப் பேணுதல் ;

(ஏ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறாகப் பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர்கள் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர்கள் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் என்பவற்றையும் மற்றும் ஏனைய பதவிகளையும் உருவாக்குதல், இல்லாதாக்குதல் அல்லது இடைநிறுத்துதல் பற்றிப் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடன் ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வி உதவிகள், உதவுத்தொகைகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்களைத் தாபித்தல் மற்றும் அளித்தல் ;

(ஒ) நிறுவகத்துக்கு வெளியேயுள்ள இடங்களில் ஆராய்ச்சியையும் கற்கைநெறிகளையும் அல்லது அத்தகைய கற்கை நெறிகளின் பாகங்களையும், அதற்காக ஏற்பாடு செய்கின்ற துணைவிதிகளுக்கிணங்க நடாத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் ;

(ஓ) பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களை பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் ஏற்றங்கீகரித்தல் ;

(ஔ) கட்டணங்களைக் கோருவதற்கும் பெறுவதற்கும் ஏற்பாடு செய்கின்ற ஏதேனும் விதிக்கிணங்க அவற்றைக் கோருதல் மற்றும் பெறுதல் ; அத்துடன்

(க) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கென மேற்கூறப்பட்ட தத்துவங்களின், கடமைகளின் அல்லது பணிகளின் இடைநேர்விளைவானவையாயினுஞ்சரி அல்லது விளைவானவையாயினுஞ்சரி, அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் பொறுப்பேற்றல்.

7. நிறுவகமானது பின்வரும் அலுவலர்களை கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) பணிப்பாளர் ; அத்துடன்

(ii) எந்தப் பதவியை வகிப்பவர் இப்பந்தியின் நோக்கத்துக்காக அலுவலரொருவராகவுள்ளாரோ அந்தப் பதவியொன்றாகவுள்ளதெனக் கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட வேறெதேனும் பதவியை வகிப்பவர்.

8. (1) நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர், பல்கலைக்கழகத்தின் விதப்புரையின் மேல் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களிடையேருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(2) அடுத்துப்பின்னரான ஒவ்வொரு பணிப்பாளரும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் நிறுவகத்தின் முகாமைச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட மூன்று ஆசிரியர்களைக் கொண்டவொரு குழாத்திலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(3) உயர்கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவர் பணிப்பாளராக நியமிக்கப்படுமிடத்து, பணிப்பாளர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட அத்தகைய உறுப்பினரை அத்தகைய நிறுவகமானது விடுவித்தல் வேண்டும். பணிப்பாளர் பதவியை ஏற்பதற்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு அடுத்துப்பின்னரான ஆசிரியரையும் பல்கலைக்கழகம் விடுவித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளரொருவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அல்லது (5) ஆம் உட்பந்தியின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அல்லது அவர் தமது அறுபத்தைந்தாவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வரை, இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

(5) (இதகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் கண்டன வாக்கின் மீது, அந்நோக்கத்துக்காக கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் ஆணைக்குழுவின் தவிசாளரினால் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். சமுகமாயிருக்கும் உறுப்பினர், அத்தகைய விசேட கூட்டத்திற்குத் தலைமைதாங்கவென பணிப்பாளர் தவிர்ந்த ஆளொருவரைத் தம்முள்ளிலிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) பதவி விலகுகின்ற அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற அல்லது தமது பதவி காலத்தைப் பூர்த்தி செய்கின்ற பணிப்பாளரொருவர், அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் அவரது நிலையான பதவியை மீண்டும் ஏற்கலாம் ; ஆயின் அவர் ஓய்வுபெறும் வயதை எய்தியிருத்தலாகாது.

(7) பணிப்பாளர், லீவு, சுகயீனம், இலங்கையில் இல்லாமை என்பன காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, ஆணைக்குழு, அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், அப்பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும் வரை பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத் துறைத் தலைவர் அப்பதவிக்குரிய அன்றாட கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(8) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், ஆணைக்குழு, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், (2) ஆம் உட்பந்தியின் கீழ் நிரந்தரமான நியமனமொன்று செய்யப்படும்வரை அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தகுதியானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத் துறைத் தலைவர் அப்பதவிக்குரிய அன்றாடக் கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

9. (1) பணிப்பாளர், நிறுவகத்தின் முழுநேர அலுவலரொருவராகவும், அதன் பிரதான நிறைவேற்று அலுவலராகவும், பிரதான கல்விசார் அலுவலராகவும் மற்றும் கணக்கீட்டலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர், சபையின் பதவி வழியுறுப்பினரொருவராகவும் நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கைச் சபையினதும் பதவி வழியுறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். சபையின் அல்லது நிறுவகத்தின் வேறேதேனும் அதிகாரசபையின் அல்லது குழுவின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமளிப்பதற்கும் பங்குபற்றுவதற்கும் அவர் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினரொருவராக இருந்தாலொழிய, அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது. சபையின் ஏதேனும் கூட்டத்திற்குப் பணிப்பாளர் வருகைதராதவிடத்து, அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கென சமுகமளித்திருக்கும் எவரேனும் உறுப்பினரை உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) சபையினால் அதன் சார்பாக பணிப்பாளருக்குச் சட்டமுறையாகக் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களுக்கிணங்கச் சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகள், அவை நிறுவனத்துடன் தொடர்புபட்ட அளவுக்கு உரியமுறையில் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துவது அவரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அந்நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் அவர் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அவற்றைப் பிரயோகிக்கலாம்.

(4) சபையினதும் ஒவ்வொரு கற்கைச் சபையினதும் முடிபுகளுக்குப் பயன்கொடுப்பது அல்லது பயன் கொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் ; அத்துடன்

(5) நிறுவகத்தின் ஒழுக்காறு, சட்டம் மற்றும் ஒழுங்கமைதியைப் பேணுவதற்குப் பணிப்பாளர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

10. நிறுவகம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) சபை ;

(ஆ) கற்கைச் சபை அல்லது சபைகள் ; அத்துடன்

(இ) அத்தகைய அதிகாரசபைகளாக இருப்பதற்கெனக் கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

11. சபையானது, நிறுவனத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் ; அதாவது :-

(i) சபையின் தவிசாளராகவிருக்க வேண்டிய நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(ii) பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் துறைத் தலைவர் ;

(iii) பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பீடத்தின் துறைத் தலைவர் ;

(iv) பேராதனைப் பல்கலைக்கழக கமத்தொழிற் பீடத்தின் துறைத் தலைவர் ;

(v) பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பணிப்பாளர் ;

(vi) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமந்தர் ;

(vii) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமந்தர் ;

(viii) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையத்தின் பணிப்பாளர் அல்லது அவரது நியமந்தர் ;

(ix) பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தினது ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் தலைவர் ; அத்துடன்

(x) ஒவ்வொரு கற்கைச் சபையினதும் தவிசாளர்.

(2) பின்வரும் ஏனைய உறுப்பினர்கள் ; அதாவது :-

(i) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் ; அத்துடன்

(ii) மானிடவியலுக்கு அல்லது சமூக விஞ்ஞானத்துக்குச் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ள ஆட்களிடையேயிருந்து சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

12. (1) சபையின் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட அடுத்தடுத்துவரும் மூன்றாண்டுக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவுறு முன்னர் பதவியை வறிதாக்குமிடத்து, அடுத்துறுபவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் ;

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எந்த அந்தஸ்தின் அல்லது உறுப்பாண்மையின் பயனைக் கொண்டு சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராகவிருந்தாரோ அந்த அந்தஸ்தை அல்லது உறுப்பாண்மையை அவர் தொடர்ந்து வைத்திருக்கும் வரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான வேண்டுகோளின் மூலம் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் பதவியிலிருந்து விலகலாம்.

(4) வராமைக்கான அனுமதியின்றிச் சபையின் அடுத்தடுத்துவரும் மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுகின்றவரான எவரேனும் நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட சபை உறுப்பினர், சபையின் உறுப்பினராகத் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவோர் ஆளை ஆணைக்குழு நியமித்தலும் வேண்டும்.

(5) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டும்.

(6) சபையானது அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும், ஆனால் ஒவ்வொராண்டும் ஆறு தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(7) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதுகின்றபோதெல்லாம், அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்கினருக்குக் குறையாததோரிடமிருந்து எழுத்திலான வேண்டுகோளொன்றை அவர் பெற்றதன் மேல் ஒரு வாரத்திற்குள், விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

13. (1) இச்சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களை வைத்திருத்தலும் , கட்டுப்படுத்துதலும், நிர்வகித்தலும்;

(ஆ) சட்டத்தினதும் தோதான வேறேதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகம் சம்பந்தமான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துதலும் தீர்மானித்தலும் ;

(இ) நிறுவகத்தின் பொதுவான நிர்வாகத்துக்கும் முகாமைக்கும் மற்றும் வேறெவையேனும் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகவும் அதற்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்பட்ட நிதிகளை நிர்வகித்தலும் கட்டுப்படுத்துதலும் ;

(ஈ) நிறுவகத்துக்கு வழங்கப்பட்ட இறுதிவிருப்பாவணக் கொடைகளையும், நன்கொடைகளையும், அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களின் அளிப்புக்களையும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெறுதலும் ஏற்றுக் கொள்ளுதலும் ;

(உ) நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் மதிப்பீடு செய்தலும், அத்தகைய அறிக்கைகளையும் அத்தகைய கணக்குகளையும் பல்கலைக்கழகத்துக்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பித்தலும் ;

(ஊ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையின் அல்லது சபைகளின் கலந்தாலோசனையுடன், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தின் பல்வேறு சிறப்பறிவுப்புலங்களுக்கு அளிக்கப்படவேண்டிய பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறுகல்விசார் சிறப்புகள் என்பவற்றையும், பின்பற்றப்பட வேண்டிய கற்கை நெறிகளையும் பயிற்சிகளையும், தேறவேண்டிய பரீட்சைகளையும் மற்றும் அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகள் என்பவற்றுக்குத் தகைமைபெற விரும்புகின்ற மாணவர்களினால் திருப்தி செய்யப்படவேண்டிய ஏனைய நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(எ) எக்கருமம் தொடர்பில் துணைவிதிகள் அல்லது விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமத்துக்காக துணைவிதிகளை அல்லது விதிகளை ஆக்குதலும், அத்தகைய துணைவிதிகளை அல்லது விதிகளை ஆக்கப்படுவதற்காகப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு அல்லது முதவைக்குச் சமர்ப்பித்தலும் ;

ஆயின், எவ்வாறாயினும் கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான துணைவிதி அல்லது விதி எதுவும், சம்பந்தப்பட்ட கற்கைச் சபையிடமிருந்தான அல்லது கற்கைச் சபைகளிடமிருந்தான அறிக்கைகளைக் கவனத்திற்கொண்ட பின்னர் தவிர ஆக்கப்படுதலாகாது.

(ஏ) நிறுவகத்தின் பணியைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவைப்பட்ட கட்டிடங்களையும், வளவுகளையும், தளபாடங்களையும் சாதனங்களையும் வேறு பொருட்களையும் வழங்குதல் ;

(ஐ) பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடன் பின்வருவனவற்றை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல் :-

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான கற்பித்தல் மற்றும் நிர்வாகப் பதவிகளுட்பட அத்தகைய பதவிகளை உருவாக்குதலும், அத்தகைய பதவிகளை இல்லாதாக்குதலும் அல்லது இடைநிறுத்துதலும் ;

(ii) நிறுவகத்துக்கு நியமிக்கப்படவேண்டிய ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்களிடமிருந்து தேவைப்படுத்தப்பட்ட தகைமை ; அத்துடன்

(iii) நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவர்களான ஆட்கள்.

(ஒ) நிறுவகத்தின் ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பாக இடைநிறுத்துதலை, விலக்குதலை அல்லது வேறு வகையாக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்தலைப் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஓ) சம்பந்தப்பட்ட மற்றும் பல்கலைக்கழக்தினால் அங்கீகிக்கப்பட்ட கற்கைச் சபையிடமிருந்தான அல்லது சபைகளிடமிருந்தான அறிக்கைகளைக் கவனத்திற்கொண்ட பின்னர் பின்வருவனவற்றை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல் :-

(அ) ஏலவேயுள்ள கற்கைச் சபைகள் மீள ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் புதிய கற்கைச் சபைகளை ஒழுங்கு செய்வதற்குமான திட்டங்கள் ; அத்துடன்

(ஆ) அந்தந்தக் கற்கைச் சபைகளுக்கு மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான சிறப்பறிவும் புலங்களைக் குறித்தளித்தல் ;

(ஔ) அது தகுதியானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகை எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமித்தலும், அவற்றின் விசாரணைக்குரிய விவரங்களைக் குறித்துரைத்தலும், அத்தகைய குழுக்களின் அறிக்கைகளைக் கவனத்திற்கொள்ளுதலும், திரிபுடனோ அல்லது திரிபின்றியோ அத்தகைய அறிக்கைகளை அங்கீகரித்தலும் அத்தயை அறிக்கைகளை நிராகரித்தலும் ;

(க) கற்கைச் சபையின் அல்லது சபைகளின் கலந்தாலோசனையுடனும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும், கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும் சேர்ப்பதற்குமான கட்டளைக் கற்கைகளை ஆணைக்குழுவுக்கு விதத்துரைத்தல் ;

(ஙு) ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்டிபடி ஏதேனும் பயன்பாடுத்தப்படாத வருமானமுட்பட, நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை ஏதேனும் பிணைப்பொறுப்பில் முதலீடு செய்தலும், அத்தகைய எவையேனும் பணங்களை இலங்கையில் அசைவற்ற ஆதனங்களைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தலும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தலும், அல்லது உடனடிச் செலவினத்துக்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களின் ஏதேனும் பாகத்தை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்புக்களில் இடுதலும் ;

(ச) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக நிறுவகத்தின் தத்துவங்களினது இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினவான நிறுவகத்தின் வேறெல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல்.

(2) ஏதேனும் கல்விசார் கருமத்தின் மீது தோதான கற்கைச் சபை அதன் அபிப்பிராயத்தைப் பதிந்து சபைக்குத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பமொன்று அதற்கு முதலில் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, அக்கருமம் தொடர்பாகச் சபையினால் தீர்மானமெதுவும் நிறைவேற்றப்படுதலாகாது.

ஆயின், அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதனதும் மீது பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனன்றிச் செயலாற்றப்படுதலாகாது.

இப்பந்தியில் "கல்விசார் கருமம்" என்பது, தோதான கற்கைச் சபையின் கட்டுப்பாட்டுக்கும் பொதுவான பணிப்புக்கும் அமைந்ததாகவுள்ள ஏதேனும் கருமம் என்று பொருளாகும்.

14. மானிடவியல் மற்றும் சமூக, விஞ்ஞானம் என்ற துறையிலான பின்வரும் சிறப்பறிவுப்புலங்களில் ஒவ்வொரு தொகுதிக்கும் அதே துறையிலுள்ள வேறேதேனும் சிறப்பறிவுப்புலனுக்கும் நிறுவகம் கற்கைச் சபையொன்றைத் தாபித்தல் வேண்டும் :-

(1) சமூக விஞ்ஞானத்துக்கான கற்கைச் சபை

புவியியல்
சமூகவியல்
அரசியல் விஞ்ஞானம்
வரலாறு
தொல்பொருளியல்
சர்வதேசத் தொடர்புகள்
சட்டம்.

(2) மொழிகள் மற்றும் இலக்கியக் கற்கைகளுக்கான கற்கைச் சபை

சிங்களம்
தமிழ்
அறபு
ஆங்கிலம்

(3) பொருளியல் மற்றும் முகாமைக்கான கற்கைச் சபை

முகாமை
கணக்கியல்
பொருளியல்
புள்ளிவிபரவியல்

(4) உளவியல், தத்துவஞானம் மற்றும் கல்விக்கான கற்கைச் சபை

உளவியல்
தத்துவமெய்ஞானம்
கல்வி

(5) மத மற்றும் கலாச்சாரக் கற்கைகளுக்கான கற்கைச் சபை

பாளி
சமஸ்கிருதம்
மேற்கத்திய தொன்மைக் கலாச்சாரம்
பௌத்த கற்கைகள்
நுண்கலைகள்
ஒப்பீட்டு மதம்
இஸ்லாமிய நாகரிகம்
இந்து நாகரிகம்.

15. (1) ஒவ்வொரு கற்கைச் சபையும் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பதவிவழி உறுப்பினரொருவராகவிருக்க வேண்டிய பணிப்பாளர் ;

(ஆ) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் இயைபான பகுதியின் துறைத் தலைவர் ;

(இ) பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களிடையே பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இயைபான கற்கைத்துறையில் சிறப்பறிவுபெற்ற நான்கு உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஈ) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் தோதான சிறப்பறிவுப்புலத்தில் மேன்மைபெற்ற ஆட்களிடையேயிருந்து சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

(2) ஏதேனும் கற்கைச் சபை, சபையின் ஒருப்பாட்டுடன் குறிப்பிட்டவொரு நோக்கத்துக்காகவும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காகவும் ஓராளைக் கூட்டுச்சேர்க்கலாம். ஆனால் அவ்வாறு கூட்டுச்சேர்க்கப்பட்ட ஆளெவரும் அத்தகைய கற்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் தேர்தலுக்கு நிற்பதற்கான அல்லது வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

(3) ஒவ்வொரு கற்கைச் சபையும் தவிசாளரொருவரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் அக்கற்கைச் சபையினால் அதன் உறுப்பினர்களிடையே தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஒவ்வொரு கற்கைச் சபையும் செயலாளரொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் அக்கற்கைச் சபையினால் அதன் உறுப்பினர்களிடையே தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும்.

(5) கற்கைச் சபையொன்றின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் கூட்டுச் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எவரேனுமிருப்பின் அவர்களுட்பட நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு கற்கைச் சபையும் அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும் ; எவ்வாறாயினும், ஒவ்வோராண்டும் ஆறு தடவைகளுக்குக் குறையாமல் அது கூடுதல் வேண்டும்.

16. (1) சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு கற்கைச் சபையும், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான இயைபான சிறப்பறிவுப்புலன்களில் போதனை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகளின் கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கற்கைச் சபையும், (1) ஆம் உட்பந்தியினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :-

(அ) சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கவனத்திற் கொள்ளுதலும் அதன் மீது அறிக்கையிடுதலும் ;

(ஆ) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான சிறப்பறிவுப்புலன்களில் கற்கை நெறிகள், கற்பித்தல், நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் மீதும் விதப்புரைகளையும் அறிக்கைகளையும் முன்வைத்தல் ;

(இ) ஏதேனும் விசேடமான விடயம் அல்லது விடயங்களைக் கவனத்திற் கொண்டு அதன் மீது அல்லது அவற்றின் மீது அறிக்கையிடும் நோக்கத்துக்காக, கற்கைச் சபையின் உறுப்பினர்கள் தவிர்ந்த ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல் ;

(ஈ) மாணவர்களைக் கற்கை நெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் சேர்ப்பதற்கான தேவைப்பாடுகளைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(உ) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான சிறப்பறிவுப்புலன்களில் கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைதலும், அத்தகைய வரைவுகளைச் சபையிடம் சமர்ப்பித்தலும் ;

(ஊ) ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் ஏற்றங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமானவர்களான அத்தகைய ஆட்களைச் சபைக்கு விதந்துரைத்தல்;

(எ) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான விசேடத் துறைகளில் விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் தேறியிருந்தும், ஏனைய விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்தி செய்திருந்தும், அந்தச் சிறப்பறிவுப்புலத்தில் பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகள் அளிக்கப்படுவதற்குத் தகவுடையோரான ஆட்களைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக் கல்வியுதவிகள், உதவித் தொகைகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றுக்கான போட்டி முறையையும் நிபந்தனைகளையும் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப் பொருளுதவிகள், ஏழைக்கல்வியுதவிகள், உதவித் தொகைகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் அளிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைச் சபைக்கு விதந்துரைத்தல் ; அத்துடன்

(ஒ) பின்வருவனவற்றைச் சபைக்கு விதந்துரைத்தல் :-

(i) ஏலவேயுள்ள கற்கைச் சபைகளை மீள ஒழுங்குப்படுத்துவதற்கும் மற்றும் புதிய கற்கைச் சபைகளை ஒழுங்குபடுத்துவதற்குமான திட்டங்கள் ; அத்துடன்

(ii) அந்தந்தக் கற்கைச் சபைகளுக்கு மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான சிறப்பறிவுப்புலன்களைக் குறித்தளித்தல்.

17. நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

18. (1) நிறுவகமானது, (இதனகத்துப்பின்னர் ''நிதியம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திலான பட்டப்பின்படிப்பு நிதியம் என அழைக்கப்படவேண்டிய நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் ; பின்வருவன அதனுட் செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) தோதான ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்துக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் ;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் ;

(இ) நிறுவகத்துக்கான மானியக்கொடைகளாகப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்டு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணம் ; அத்துடன்

(ஈ) எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் நிறுவகத்துக்குத் திரளுகின்ற அத்தகைய வேறு பணங்கள் ;

(2) தோதான வருமானத் தலைப்புக்களின் கீழ் வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட, குறிப்பிட்டவொரு மாதத்தினுள் நிதியத்தினுட் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் பற்றிய சுருக்கமொன்று, அடுத்துப் பின்வரும் மாதம் முடிவதற்கு முன்னர் ஆணைக்குழுவிடம் அதன் தகவலுக்காகப் பணிப்பாளினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

19. பின்வருவன பணிப்பாளரின் கடமைகளாதல் வேண்டும் :-

(அ) சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வடிவத்திலும் முறையிலும் நிறுவகத்தின் கணக்குகளை வைத்திருத்தல் ;

(ஆ) நிதியத்தினுட் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்தகைய பணங்களை முறையான கணக்குத் தலைப்புகளுக்கு வரவுவைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல் அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய மூவாண்டு மதிப்பீடுகளையும் அடுத்துப் பின்வரும் ஆண்டிற்கான வருடாந்த நிதிசார் ஒதுக்கீடுகளையும் சபைக்காகத் தயாரித்தல் ;

ஆயின், எவ்வாறாயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மானியக் கொடைகளிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் நிறுவகத்தின் கணக்குகளில், தனிவேறாகக் கணக்கிடப்படுதல் வேண்டும் அல்லது அந்த மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக முறையாக வழங்கப்பட்டனவோ அந்த ஏதேனும் நோக்கம் அல்லது குறிக்கோள் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக பயன்படுத்தப்படுதலாகாது.

20. (1) ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வடிவத்திலும் முறையிலும் அத்தகைய விபரங்களைக் கொண்டதாயும் நிறுவகமானது அதன் செயற்பாடுகள் தொடர்பான வருடாந்தக் கணக்குகள் பற்றிய கூற்றொன்றையும் புள்ளி விவரங்களையும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குகள் பற்றிய புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

21. ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் அத்தகைய ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

22. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, நிறுவகத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் வினைத்திறனாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமென அது பல்கலைக்கழகத்தின் ஒருமைப்பாட்டுடனும் மற்றும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், ஆசிரியர்களையும், வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, விடயத்திற்கேற்ப, பல்கலைக்கழகத்தினால் அதன் சொந்தப் பணியாட்டொகுதியிலிருந்து விடுவிக்கப்படுவதன் மேல் வழங்கப்படுதல் வேண்டும் அல்லது ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் X ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்களுக்கும் மற்றும் அவை தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர், ஆசிரியர் அல்லது வேறு ஊழியர் ஒருவர் முழுநேர அடிப்படையில் நிறுவகத்துக்கான சேவைக்காக விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவிக்குரிய சம்பளமும், படிகளும் அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். வேறேதேனும் விடயத்தில், நிறுவகம், பல்கலைகழகத்தின் கலந்தாலோசனையுடன் அது தீர்மானிக்கக்கூடியவாறானவையும், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறானவையுமான அத்தகைய செயல்நிறைவேற்றப்படிகளைச் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியருக்குச் செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரும் மாணவர்களும் பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவர்களாதல் வேண்டும். பல்கலைக்கழகத்தின் பேரவை, நிறுவகத்தின் ஒழுக்காற்று அதிகாரசபையாகவிருத்தல் வேண்டும்.

23. எவரேனுமாள் உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா, பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது கூட்டுச் சேர்க்கப்பட்டுள்ளாரா என்பது பற்றி அல்லது எவரேனுமாள் நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கு உரித்துடையவராகவுள்ளாரா என்பது பற்றி ஏதேனும் பிரச்சினை எழுமாயின், அத்தகைய பிரச்சினை ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன்மீது அதன் முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.

24. நிறுவகத்தின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அத்தகைய உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

25. இக்கட்டளைச் சட்டத்தில் -

"கலைப்பீடம்" என்பது, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் என்று பொருளாகும் ;

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருளாகும் ; அத்துடன்

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பல்கலைக்கழக வளாகம், திறந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது உயர் படிப்புக்கான நிலையம் என்று பொருளாகும்.

1-513

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.